# கற்க கசடற

(சிறுவர் கட்டுரைகள்)



கிண்ணியா ஏ.எம். கஸ்புள்ளா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்க கசடற

(சிறுவர் கட்டுரைகள்)

*ஏ.எம். கஸ்புள்ளா*

1670

வெளியீடு
செய்ப் பப்ளிகேசன்
கட்டையாறு வீதி
கிண்ணியா - 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூல் | - | கற்க கசடற<br>(சிறுவர் கட்டுரைகள்) |
| ஆசிரியர் | - | ஏ.எம்.கஸ்புள்ளா |
| வகை | - | சிறுவர் இலக்கியம் |
| பதிப்பு | - | 05.04.2014 |
| பதிப்புரிமை | - | நூலாசிரியருக்கு |
| வெளியீடு | - | செய்ப் பப்ளிகேசன்<br>கட்டையாறு வீதி<br>கிண்ணியா - 02 |
| தொலைபேசி | - | 0774488441 |
| அளவு | - | A5 |
| பக்கம் | - | vi + 36 |
| முகவரி | - | ஏ.எம்.கஸ்புள்ளா<br>கட்டையாறு வீதி<br>கிண்ணியா - 02 |
| ISBN | - | 978-955-4840-01-0 |
| விலை | - | 175/= |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

கிண்ணியாவில் அறிவுசார் நூற்கள் வெளிவர வேண்டும் என்ற எண்ணம் எழுத்துலகில் தடம் பிடித்தவர்கள் நம் மத்தியில் இருப்பதை அண்மைக் காலமாக அறியக் கூடியதாக இருக்கிறது. அந்த வகையில் "கற்ககசடற" என்ற சிறுவர் கட்டுரைத் தொகுப்பை அப்துல் மனாபு கஸ்புள்ளா வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

கற்க கசடற கற்பவை -கற்றபின்
நிற்க அதற்குக் தக

என்ற குறளினை இன்னும் சுருக்கி "கற்க நிற்க" என்பது அல் அக்ஷா கல்லூரியின் மகுட வாசகம் இதனை இன்னொரு வடிவிலே " கற்க கசடற" என மகுடமிட்டு இச்சிறு நூல் வெளிவருவதையிட்டு நான் பெரிதும் பூரிப் படைகின்றேன். ஏனெனில் தன்னை இந்நிலைக்கு உயர்த்தி எழுத்துலகில் தடம் பதிக்கச் செய்த பாடசாலையின் மனம் இன்னும் இவரில் இருக்கிறது.

பாடசாலைக் காலத்திலே கவிதையில் ஆர்வம் காட்டி தமிழ் தினப் போட்டிகளில் பரிசு பெற்றும் தேசியப் பத்திரிகை களில் கவிதைகள் எழுதியும் ஒரு இளம் கவிஞராக புகழ்பெற்று சிறுவர் கட்டுரைகள் ஆக்குவதிலும் ஈடுபட்டார். இவ்வாறு தேசியப் பத்திரிகைகளில் வெளியான 22 சிறுவர் கட்டுரைகளின் தொகுப்பே "கற்ககசடற"

மேலதிக வாசிப்பில் மாணவர்களது அக்கறை குறைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் இச்சிறுநூல் மாணவரது மொழி வளர்ச்சிக்கு பெரிதும் பயன்படும் என்று நம்புகிறேன்.

இது இவரது முதல் படைப்பு இன்னும் பல நூற்களை வெளியிட்டு எழுத்துலகில் புகழ் பரப்ப வாழ்த்துகிறேன்.

ஏ.ஆர்.எம். பரீத்
ஓய்வு பெற்ற அதிபர்
தி/ அல் அக்ஷா கல்லூரி
கிண்ணியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

பாடசாலை படிக்கின்ற காலத்திலே என்னுள் கவிதைகள், கட்டுரைகள் எழுதுவதில் ஆர்வம் ஏற்பட்டன. என் ஆர்வத்தை பத்திரிகையுடன் தொடர்பாக்கி என் ஆக்கங்கள் அதில் பிரசுரமாக வழிகாட்டியாக இருந்தவர் எனது சகோதரர் ஆசிரியர் ஏ.எம்.ஏ றசூல் ஆகும். மேலும் மேலும் என்னை உற்சாகப்படுத்தி எழுதச்சொன்னவர்கள் அல் அக்ஷாவின் முன்னாள் அதிபர் ஏ.ஆர்.எம்.பரீத், ஏ.சி.முஸ்இல் (பணிப்பாளர் - திட்டமிடல்). ஆசிரியர்களான எம்.வை. எம்.அலி, அக்பர் சலீம், ஏ.ஆர்.ஹஸ்ஸாலி மற்றும் கவிஞர் களான வி.எம்.அன்ஸார், கிண்ணியா அமிரலி, கிண்ணியா ஹசன்ஜி என் குடும்பத்தவர்கள், என் நண்பர் டி.எம்.நஸீர் கிண்ணியாவின் பிற கவிஞர்களையும் குறிப்பிடலாம்.

இந்நிலைக்கு என்னை உருவாக்கிய அல்லாஹ்விற்கு நன்றி கூறிய பின் மேல் குறிப்பிட்டவர்களுக்கும் என் நன்றியை மறவாமல் தெரிவித்துக் கொண்டு, மேலும் எனது கட்டுரைகளை பிரசுரித்த தினகரன், வீரகேசரி, தினக்குரல், நவமணி போன்ற பத்திரிகைகளுக்கும், அஸ்ரா அச்சகத்துக் கும் நன்றி தெரிவித்தவனாக உங்களிடம் கேட்டுக்கொள்வது வாசியுங்கள்

என்னை வளப்படுத்துங்கள்
முடிந்தால் வாழ்த்துங்கள்

அன்புடன்
ஏ.எம். கஸ்புள்ளா
தனிப்பட்ட 0774488441



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 01. | கற்க கசடற | 1 |
| 02. | எனது செல்லப் பிராணி பச்சைக்கிளி | 3 |
| 03. | குடையின் சுயசரிதை | 5 |
| 04. | எனது நண்பன் | 7 |
| 05. | நான் வைத்தியரானால் | 8 |
| 06. | எனது ஊர் | 10 |
| 07. | பூந்தோட்டம் | 12 |
| 08. | எனது பொழுது போக்கு | 14 |
| 09. | நான் சென்ற சுற்றுலா | 16 |
| 10. | என் மனம் கவர்ந்த இடங்கள் | 18 |
| 11. | முதியோர்கள் | 20 |
| 12. | நான் வாசித்த நூல் | 22 |
| 13. | மனம் விரும்பும் மாலை நேரம் | 23 |
| 14. | எனது பாடசாலை | 24 |
| 15. | அன்புள்ள என் அம்மா | 26 |
| 16. | ஒரு மழை நாளில் | 27 |
| 17. | ஆங்கிலக் கல்வியின் அவசியம் | 28 |
| 18. | நான் விரும்பும் தொழில் | 30 |
| 19. | மரங்கள் எங்கள் உறவுகளாகும் | 32 |
| 20. | அழகின் கடலே | 33 |
| 21. | நான் கண்ட கனவு | 35 |
| 22. | காலைப் பொழுது | 36 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கற்க கசடற

கல்வி ஒவ்வொரு மனிதனுக்கும் முக்கியமான ஒன்றாகும். எமது வாழ்வை நேரான பாதைக்கு கொண்டு செல்லவும் தவறான பாதையை விட்டு விலகி நடக்கவும் கல்வி துணை புரிகின்றது. திருக்குறளில் திருவள்ளுவர்

**கண்ணுடையர் என்போர் கற்றோர் - முகத்து**

**இரண்டு புண்ணுடையர் கல்லாதவர்.**

என்று மிக அழகாக கல்வியின் சிறப்பு பற்றி கூறியுள்ளார். கல்வியை நாமே தேடி கற்றுக் கொள்ள வேண்டும். நம்மைத் தேடி கல்வி வராது. அதனால்தான் இஸ்லாம் சீனா சென்றாகினும் சீர் கல்வியை கற்றுக் கொள் என்று பணிக்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விக்கு அழிவு என்பது கிடையாது ஏனென்றால் மனிதன் கல்வியை என்றும் கற்றுக் கொண்டே இருப்பதால் கல்வி கற்றவர்கள் எங்கு சென்றாலும் பிறரால் கண்ணியப் படுத்தப்படுவார்கள். ஒருவர் கல்வியறிவாளராக இருந்து மரணித்தாலும் அவரது நற்புகழ் என்றும் பேசப்படும்.

இன்றைய மாணவர்கள் நாளைய தலைவர்களாக, மருத்துவர்களாக, பொறியியலாளர்களாக வர வேண்டு மானால் கல்வியை திறம்பட கற்றிட வேண்டும். நாம் எவ்வளவு தான் கற்றாலும் கற்றது கையளவு கல்லாதது உலகளவு என்று பழமொழி ஒன்றுகூட இருக்கின்றது. கல்விக்கு கரையில்லை எனவே மனிதனானவன் தனது ஆயுள் முழுவதும் கற்றுக் கொண்டே இருக்கலாம்.

கல்வி கற்றவரிடம் நீதி, நேர்மை, ஒழுக்கம் என்பன ஒருங்கே காணப்படும். இக்காலத்தைப் பொறுத்தவரை கல்வி கற்காதவன் சமூகத்தில் மதிக்கப்படுவது குறைவாகவே காணப்படும். எனவே இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த கல்வியை நாம் தேடித் தேடி கற்றுக் கொண்டு சிறப்புறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எனது செல்லப்பிராணி பச்சைக்கிளி

எனது செல்லப்பிராணி 'பச்சைக்கிளியாகும்' அதற்கு நான் வைத்த பெயர் "சிமி" சிமி பார்ப்பவர்களை கவர்ந்து கொள்ளும் அழகுடையது. எனது குரல் கேட்டால் அருகே ஓடி வந்து என்னோடு அணைந்து கொள்ளும். நான் எதைச் சொன்னாலும் சிமி அதைப் போலவே திருப்பிச் சொல்லும்

எனது சிமி அதிகமாக பழங்களையே விரும்பி உண்ணும். என் வீட்டிற்கு வரும் விருந்தினர்கள் சிமியுடன் அன்புடன் பேசிக்கொண்டிருப்பார்கள். அதனுடன் பேசிக் கொண்டிருந் தால் நேரம் போவதே தெரியாது.

ஒருநாள் சிமி சுகயீனமுற்றுக் கிடந்தது. அது எனக்கு பெரும் கவலையைத் தந்தது. நான் சிமிக்கு நலமாகிடும் என்று நினைத்திருந்தேன். ஆனால் இரண்டு நாட்களாகியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிமிக்கு எழுந்து நடக்க முடியாமல் இருந்தது. உடனே நான் வைத்தியரிடம் எடுத்துச் சென்று சிமியை காப்பாற்றி விட்டேன். அன்றுதான் என் மனசுக்கு நிம்மதி வந்தது. எனது சிமியை கவனமாக மிகுந்த பாசம் காட்டி நான் வளர்த்து வருகின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குடையின் சுயசரிதை

எனது பெயர் குடை எனது அங்கங்கள் உடைக்கப்பட்டு, மேனியழகு ஒளியிழந்து. ஒரு வீட்டு மூலையில் இப்போது முடங்கிக்கிடக்கின்றேன். எனது கடந்த காலத்தை மெல்ல மீட்டிப்பார்க்கின்றேன்.

ஒரு கம்பனியினால் உற்பத்தி செய்யப்பட்டு, பல வியாபார நிலையங்களில் விற்பனை செய்யப்பட்டேன். சிவப்பு, பச்சை, மஞ்சள், கறுப்பு ஆகிய பல நிறங்களில் அழகாக காட்சி தருவேன். ஒருநாள் ஒருவர் நான் இருந்த கடைக்கு வந்து என்னை வாங்கிச் சென்றார். என்னை வாங்கிச் சென்றவரின் வீட்டில் அவர்களின் பிள்ளைகள் என் அழகைப் பார்த்து ரசித்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெயில் காலங்களில் அவர்களின் நிழலுக்காக என்னை எடுத்துச் செல்வார்கள். நான் வெயிலின் சூட்டினைத் தாங்கி என்னை எடுத்துச் செல்பவருக்கு நிழலின் சுகத்தினைக் கொடுப்பேன். அதன் மூலம் என்னை எடுத்துச் சென்றவர், அவரது வேலை முடிப்பதற்கு துணை புரிந்தேன். மழைக்காலங்களிலும் என்னை எடுத்துச் செல்லும் போதும் மழையில் இருந்து அவர்களை பாதுகாப்பேன். அதன் மூலம் அவர்கள் என்னை எங்கு சென்றாலும் கையோடு எடுத்துச் செல்வார்கள். சதையும் நகமும் போல என் வீட்டிலுள்ள ஒவ்வொருவரும் என்னை பத்திரமாக பாதுகாத்தார்கள்.

இவ்வாறு பல்வேறு வகையில் என் வீட்டிலுள்ளவர்களுக்கு பயன்பட்டேன். ஒருநாள் வெளியே வரும்போது பெரும் பலத்துடன் காற்றோடு மழை பெய்தது அப்போது, அந்தக் காற்றுக்கு என்னால் தாக்குப்பிடிக்க முடியவில்லை அதனால் என்னில் ஒருபகுதி உடைந்து போயின. எனது எஜமானி இதனைக் கண்டு, பழுது பார்க்காமல் என்னை ஒரு வீட்டு மூலைக்குள் போட்டு விட்டார்கள். காலஞ்செல்லச் செல்ல எனது அங்கங்கள் செயல் இழந்து போயின. அன்றிலிருந்து எவரும் என்னை கவனியாது விட்டது மனசுக்குக்கவலை தருகிறது. இன்று நான் ஒரு கழிவுக் கூடையில் கிடக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எனது நண்பன்

எனது நண்பனின் பெயர் முஹம்மட் நஸீர், அவன் நான் படிக்கும் பாடசாலையில் என்னுடன் ஒரே வகுப்பில் ஆறாம் தரத்தில் கல்வி கற்கின்றான். எனது நண்பனும் நானும் ஒன்றாகவே பாடசாலைக்குச் செல்வோம். விடுமுறை நாட்களில் என்னைத்தேடி என் நண்பன் வீட்டுக்கு வருவான். எனது நண்பனின் வீட்டிலிருந்து எனது வீடு நூறு மீட்டர் தூரமாகும். நண்பனின் வீட்டு விசேட தினங்களில் என்னை குடும்ப சகிதம் வருமாறு அழைப்பான். நானும் அவ்வாறான தினங்களில் அழைப்பதுண்டு.

எனது நண்பனை ஒருநாள் பிரிந்தாலும் ஏதோ ஒன்றை இழந்ததுபோல எனக்கிருக்கும். மேலும் எனது நண்பன் படிப்பதற்காக புத்தகங்கள் தந்து உதவுவான். நான் சுகவீனமாக இருந்தால் என்னை வந்து பார்த்து எனக்கு ஆறுதல் வார்த்தைகளைச் சொல்லுவான். இன்ப துன்பங் களில் கலந்து கொள்ளும் அவனே என்றும் என் நண்பனாக இருக்க வேண்டுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நான் வைத்தியரானால்.

மருத்துவத்துறையில் படித்து ஒரு வைத்தியராக வேண்டும். என்பதே எனது இலட்சிய மாகும். வைத்தியத் தொழில் இன, மத பேதமின்றி சகலருக் கும் சேவை செய்யக் கூடிய ஒரு துறையாகும். அந்த வகையில் நான் வைத்தியரானால் தியாக மனப்பான்மையுடனும், பொறுமையுடனும், சகிப்புத் தன்மையுடனும் நோயாளிகளுடன் பழகி அவர்களின் உணர்வுகளுக்கும், உள்ளங்களுக்கும் மதிப்பளித்து எனது சேவையைச் செய்வேன்.

மேலும், மருத்துவ வசதிகளற்ற பல கிராமங்களுக்குச் சென்று மருத்துவ வசதிகளை ஏற்படுத்தி அங்கும் எனது சேவையை தொடர்வேன். நோய்களினால் அல்லற்பட்டு காணப்படும் ஏழை எளியவர்களுக்கு இலவசமாக மருத்துவம் செய்து அவர்களின் நோய்களைக் குணப்படுத்துவேன்.

பல உயிர்களை தன் உயிராய் நினைத்து காப்பாற்றுவேன். எந்த நேரத்திலும் மக்களின் நலன்காக்க முயற்சிப்பேன். எனது சேவையில் நித்தமும், சித்தமாய் இருப்பேன். எனது வைத்தியசாலை கடமைக்கு என்றும் செல்வேன். ஓய்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்களிலும் வைத்தியசாலை சென்று, நோயாளிகளைக் கவனிப்பேன். “நோயற்ற வாழ்வே குறையற்ற செல்வம்” என்ற வகையில் மக்களுக்கு சுகாதாரத்தைப் பேணவழி வகுப்பேன்.

சுற்றுப்புறச் சூழலில் ஏற்படுகின்ற டெங்கு, மலேரியா மற்றும் ஏனைய நோய்கள் பரவாமல் பாதுகாக்கவும், கழிவுகளை சிறந்த முறையில் அகற்றுவதற்கும் அறிவுரை வழங்குவேன். சுத்தம் சுகம் தரும் என்ற பழமொழிக்கேற்ப வாழுமாறு மக்களைப் பணிப்பேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எனது ஊர்

எனது ஊர் கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் தொகுதியில் அமைந்துள்ள கிண்ணியாவாகும். எனது ஊரில் முஸ்லிம், தமிழ் மக்கள் மகிழ்ச்சியுடனும் நல்ல ஒற்றுமையாகவும் வாழ்ந்து வருகின்றனர். இங்கு வாழும் மக்களின் பிரதான தொழிலாக மீன்பிடி, விவசாயம் மற்றும் அரசாங்கத் தொழில் என்பனவாகும்.

எனது ஊரில் மாணவர்களின் கல்வியை விருத்தி செய்ய பாடசலைகளும் அறபுக்கல்லூரிகளும், நூலக வசதிகளும் மற்றும் மனிதர்களின் தேவைகளுக்காக தபால் நிலையம், வைத்தியசாலை, மின்சார சபை, பிரதேச சபை, நகரசபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவைகளும் மற்றும் மக்களின் பாதுகாப்புக்காக பொலிஸ் நிலையம் போன்ற வசதிகள் காணப்படுகின்றன. அத்துடன் இலங்கையிலேயே மிக நீளமான பாலம் எனது ஊரான கிண்ணியாவில் அமைந்துள்ளது.

எனது ஊர் அபிவிருத்தியடைந்து வரும் ஒரு கிராமமாகும். எல்லா அம்சங்களும் அமைந்து காணப்படும் அழகிய ஊராக எனது ஊர் கிண்ணியா திகழ்கின்றது. எனது ஊரில் பண்டிகைகள் கலைவிழா, பரிசளிப்பு விழா மெய் வல்லுநர் போட்டி ஆகியனவும் எனது ஊர் மக்களால் ஆண்டு தோறும் மிக விமர்சையாக கொண்டாடப்பட்டு வருகின்றன. வறுமையிற் செம்மையான வாழ்க்கை ஒற்றுமை ஒருவருக்கு ஒருவர் உதவும் உளப்பாங்கு போட்டி பொறாமை இன்மை, மகிழ்ச்சியையும், உற்சாகத்தையும் தரும் விழாக்கள், வைபவங்கள் என்பவற்றால் எனது ஊர் எல்லோராலும் விரும்பப்படும் நல்ல ஊராக விளங்குகின்றது. நான் எனது ஊரை மிகவும் நேசிக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூந்தோட்டம்

எல்லோரின் மனதைக் கவரக் கூடிய ஒரு விடயம் தான் பூந்தோட்டமாகும். பூக்களை விரும்பாத மனிதர்களே இல்லை எனலாம். என்னையும் மிகவும் கவர்ந்த ஒரு விடயமாக இந்தப் பூக்கள் திகழ்கின்றன. பூக்களில் பல வகைகள் காணப்படுகின்றன. கோட்டுப் பூ, கொடிப் பூ, நீர்ப்பூ என்றழைப்பர். இப்பூக்களை ரோஜாப் பூ, மல்லிகைப் பூ, சூரியகாந்தி பூ, போன்ற பல பெயர்களில் அழைக்கின்றனர். அது மட்டுமல்ல பூக்களில் பல வர்ணங்களும் உண்டு. அதாவது சிவப்பு, மஞ்சள், நீலம், ஊதா போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

பூக்களின் நறுமணத்தைச் சிறியோர் முதல் பெரியோர் வரை நுகராமல் இருக்க முடியாது. அந்தளவு பூக்கள் மக்களின் மனதை ஈர்த்துள்ளன. மனிதர்கள் பூந்தோட்டத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல தேவைகளுக்காக வளர்க்கின்றனர். சிலர் அழகுக் காகவும், பலர் பொழுது போக்குக்காகவும் மற்றும் பல தேவைகளுக்காகவும் வீடுகளில் வளர்க்கின்றனர். இவ்வாறு இலங்கையில் பல பிரபல்யம் வாய்ந்த பூந்தோட்டங்களும் காணப்படுகின்றன. அதாவது பேராதனைப் பூங்கா, ஹக்கலப் பூந்தோட்டம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இப்பூந்தோட்டங்களை பார்வையிட பல்லாயிரக்கணக்கான மனிதர்கள் வருகின்றனர். இவ்வாறான பூந்தோட்டங்கள் மக்களின் உள்ளங்களில் மகிழ்ச்சியை ஏற்படுத்தி இதயங்களில் அமைதியை உண்டாக்குகின்றன. இவ்வாறான பூக்களின் பயன்கள் ஏராளம் எனலாம். இப்பூக்களை அழகு சாதனமாகவும் நோயைக் குணப்படுத்தும் மருந்தாகவும் மற்றும் சமையலுக்காகவும் பயன்படுத்தப்படுகின்றன.

பூக்களைப் பற்றி பாடாத கவிஞர்களே இல்லை எனலாம். பூக்களை ரசிக்கும் இதயங்கள் ஏராளம் இவ்வாறு பல சிறப்பியல்புகளை தன்னகத்தே கொண்டுள்ளது இப் பூந்தோட்டங்களாகும். எனவே நாமும் இவ்வாறு பல பயன் களை தரக்கூடிய பூந்தோட்டங்களை வளர்த்து வீட்டையும், சூழலையும் அலங்கரித்து வாழ்வோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எனது பொழுது போக்கு

ஒவ்வொரு மனிதனும் தங்களுக்குத் தேவையான துறையை தேர்ந்து அத்துறையில் அவர்களது நேரகாலத்தை செலவு செய்வதே பொழுது போக்காகும். அந்த வகையில் எனது பொழுது போக்கு பத்திரிகை வாசித்தலாகும்.

பத்திரிகை வாசிப்பு எனது அறிவையும் ஆளுமையையும் விருத்தி செய்கின்ற விடயமாக இருக்கின்றது. அதனால் தான் வாசிப்பு ஒரு மனிதனை முழு மனிதனாக ஆக்கு கின்றது. என்று சான்றோர் கூறினர். இலங்கையில் இருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் அழகுத் தமிழிலே தமிழ்ப் பத்திரிகைகள் வெளியாகிக்கொண்டிருக்கின்றன.

இலங்கையிலிருந்து தினகரன், வீரகேசரி, தினமுரசு, நவமணி, மித்திரன், தினக்குரல் இன்னும் பல பத்திரிகைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளிதழாகவும் வாரப் பத்திரிகையாகவும் வெளியிடப் படுகின்றன.

இவற்றை வாசிப்பதன் மூலம் அறியாத பல விடயங்களை நான் அறிந்து கொள்கின்றேன்.

ஒரு பத்திரிகையை நோக்கினால், உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்திகள், இலக்கியத் தகவல்கள், சினிமா விமர்சனங்கள், அரசியல் விடயங்கள், மாணவர் பகுதி, சமயப் பகுதி, ஆசிரியர் தலையங்கம் என அப்பத்திரிகையை அலங்கரித் துச் செல்லும். பத்திரிகைகள் செய்திகளை உடனுக்குடன் தருவது அதனது சேவையாகும்.

பாடசாலைக் கல்வியோடு உலகக் கல்வியையும் பத்திரிகை வாசிப்பதன் மூலம் பெற்றுக்கொள்வதோடு வாசித்த பத்திரி கைகளை பாதுகாப்பாக சேமித்து வைக்கின்றேன். பத்திரிகை வாசிப்பு எனக்கோர் சிறந்த பொழுது போக்காகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நான் சென்ற சுற்றுலா

நான் எனது குடும்பத்துடன் எனது ஊரிலிருந்து நுவரெலியா வுக்கு மூன்று நாள் சுற்றுலா சென்றேன். ஊரிலிருந்து புறப்படும் போது நேரம் காலை ஏழு மணியாகும். போகும் வழியில் கந்தளாய்க் குளத்து அருகில் வாகனத்தை நிறுத்தி காலை உணவை அங்கு வைத்து சாப்பிட்டோம். சாப்பிட்டு முடிந்ததும் பயணத்தைத் தொடர்ந்தோம். நுவரெலியா நீண்ட தூரம் என்பதால் வாகனத்தை நிறுத்தி இளைப்பாறி மெதுவாக எங்கள் பயணம் தொடர்ந்தது.

பகல் உணவு மாத்தளை நகரிலுள்ள ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டு மீண்டும் பயணித்து நுவரெலியாவை சென்றடையும்போது நேரம் மாலை ஆறரை மணியாகும். நுவரெலியாவின் வீதிகள் வளைந்து வளைந்து காணப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டது. பார்ப்பதற்கு அழகாக இருந்தாலும் மனதிற்கு பயமாக இருந்தது. மேலும் வீதிகள் எல்லாம் பனிமூட்டம் அதிகமாக காணப்பட்டது. நிதானமாக வாகனத்தை சாரதிகள் செலுத்தாவிட்டால் விபத்துக்கள் ஏற்படும் என்பதை உணர்ந்துகொள்ள முடிந்தது.

நுவரெலியாவில் ஹோட்டல் வின்சனில் மூன்று நாட்களும் தங்கியிருந்தோம். முதல் நாள் ஹக்கல பூந்தோட்டம் பார்க்கச் சென்றோம். மற்றும் அம்பேவல பாற்பண்ணை யையும் பார்த்தோம். அன்றைய பொழுது இனிதாக கழிந்தது மறுநாள் காலை ஞாயிறு தினம் சந்தைக்குச் சென்றோம். அங்கு விரும்பிய பொருட்களை வாங்கினோம். அதன் பின்னர் நாங்கள் இருந்த ஹோட்டல் அருகில் அமைந் துள்ள விக்டோரியா பார்க் அதையும் பார்த்ததும் எங்களது சுற்றுலாவை முடித்து ஹோட்டலிருந்து பகல் இரண்டு மணியளவில் எனது ஊருக்குப் புறப்பட்டோம். இதுவே நான் சென்ற சுற்றுலாவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் மனம் கவர்ந்த இடங்கள்


இலங்கையில் அதிகமான இடங்கள் அழகாகவும் உல்லாச பயணிகளை கவரக் கூடியதாகவும் இருக்கின்றன. அதுபோல, என்மனம் கவர்ந்த இடங்களாக திருகோண மலை மாவட்டத்தில் உள்ள நிலாவெளி பீச், கன்னியா வெந்நீர் ஊற்று, புல்மோட்டை அரிசி மலை, கோட்டையில் அமைந்துள்ள திருக்கோணஸ்வரம், கிண்ணியா செல்லும் வழியில் அமைந்துள்ள மாபிள் பீச் என்பன காணப் படுகின்றன.

## நிலாவெளி பீச்



இது மிக நீண்டதாக இருக்கும் நிலாவெளி கடலுக்குள்ளே புறாமலை எனும் தீவுள்ளது. இங்கு சிறு குன்றுகள், மரங்கள், புறாக்கள் அழகிய முருகைக் கற்கள் என்பனவும் உள்ளன. பார்ப்பதற்கு அழகாக இருக்கும்.

## கன்னியா வெந்நீர் ஊற்று



இங்கு ஏழு வகையான வெந்நீர் கிணறுகள் உள்ளன. ஒவ்வொரு கிணற்று நீரும் வித்தியாசமான வெப்பத்தைத் தருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோணேஸ்வரம் ஆலயம்.



இது திருகோணமலை கோட்டையில் அமைந்துள்ளது. மிகவும் சிறப்பு மிக்க ஒரு இடமாகும். இங்கு இராவணன் வெட்டு என்று எல்லோராலும் அழைக்கப்படுகின்ற ஒரு இடமும் உண்டு மேலும் ஆங்கிலேயர் ஆட்சிக் காலங்களில் பயன்படுத்திய யுத்த கருவிகளும் சில காணப்படுகின்றன.

## புல்மோட்டை அரிசிமலை



இங்குள்ள மணல் அரிசி போன்று காட்சி தருவதால் அரிசி மலை என பெயர் வந்தது. இந்த இடம் கடலோடு சேர்ந்து காணப்படுகின்றது.

## மாபிள் பீச்.



கிண்ணியா செல்லும் வீதியில் அமைந்துள்ளது. இங்கு மணல் மற்றும் கற்கள் பளிங்குகள் போல மின்னுவதால் மாபிள் பீச் என்று அழைக்கப்படுகிறது. வடிவு மிக்க சங்குகளும் வசந்தம் தரும் இயற்கை மரங்களும் மனதிற்கு நிம்மதியைத் தருவதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முதியோர்கள்.

முதியோர்கள் எமது அன்புக்கும் மரியாதைக்கும் உரியவர்கள். அவர்களுடன் என்றும் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும். முதியோர்கள் செய்கின்ற சில செயல்கள் சிறு பிள்ளைத் தனமாக இருக்கும் அதை நாம் பெரிதாக பொருட்படுத்தக் கூடாது.

முதியோர்கள் சந்தோஷப்படும் விதத்தில் அவர்களுடன் பேசிப் பழகி அவர்களின் மனம் பாதிப்புறா வண்ணம் அவர்களை கவனித்துக் கொள்ளல் வெண்டும். முதியோர்களை அலட்சியப்படுத்துவதை மதங்கள் வெறுக்கின்றன. 'சீ' என்ற வார்த்தையைக் கூட உன் பெற்றோரைப் பார்த்துச் சொல்லாதே' என்று முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதியோர்கள் நடக்க முடியாதவர்களாக, நன்றாப் பேச முடியாதவர்களாக, சிலர் பார்வை தெளிவற்றவர்களாக, மேலும் பேசுவதை விளங்கிக் கொள்ள முடியாதவர்களாக இருப்பார்கள். அவ்வாறானவர்களின் நிலைமைகளை நன்கு அறிந்து அவர்களுக்கு உதவ வேண்டும்.

இன்றைய சமூகத்தில் முதியோர்கள் கவனிக்கபடுவது அரிதாக உள்ளன. அவர்களை ஒரு சுமையாகக் கருதி முதியோர் இல்லங்களில் அவர்களை சேர்த்து விடுகின்றனர். நீண்ட காலம் உறவுகளுடன் வாழ்ந்த அவர்கள் இவ்வாறு தனிமைப்படுத்தப்படுவது துன்பத்தைத் தருகின்ற விடய மாகும். எம்முடைய ஒவ்வொரு வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் காரணமான முதியோர்கள் தனிமைப்படுத்தப்படுவதிலிருந்து பாதுகாப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் வாசித்த நூல்



நான் வாசித்த நூலின் பெயர் உறவுகள் குதூகலிக்கட்டும். என்னும் சிறுவர் பாடலாகும் இந்நூலின் ஆசிரியர் மனாபு ஏ றகூல் கிண்ணியாவைப் பிறப்பிடமாகவும் வான்எல எனும் கிராமத்தை வசிப்பிட மாகவும் கொண்டவர்.

இவரது இச்சிறுவர் பாடலானது யானை, தோழி, குடை, அம்மா, ஆசை என்னும் சின்னச் சின்னத் தலைப்புக்களில் சிறுவர்களை கவரக் கூடியதாக உள்ளது. நூலில் உள்ள முப்பத்தாறு சிறுவர் பாடல்களும் ஆசிரியரால் அழகாக எழுதப்பட்டுள்ளன. மேலும் இவரின் முதல் தொகுப்பாக இந்நூல் அழகிய அட்டைப் படத்துடன் வெளியாகியுள்ளது.

தானும் ஆரம்பக் கல்வி ஆசிரியராக இருந்து ஆரம்ப நெறி மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பயன் தரக்கூடியதாக இந்நூலை ஆசிரியர் கல்விச் சமூகத்திற்கு தந்துள்ளார். அணிந்துரை, வாழ்த்துரைகளை அட்டாளைச் சேனை ஆசிரியர் கலாசாலை அதிபர், பிரதி அதிபர் போன்றோர்கள் வழங்கியுள்ளனர். இந்நூலை வாசித்து நாமும் பயன் பெறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனம் விரும்பும் மாலை நேரம்.

எங்கும் அமைதி நிலவும் சூழல். மனித வேலைகளுக்கும் மூளைகளுக்கும் ஓய்வு கொடுத்தாற் போல் ஒரு பொழுது அதுவே மனம் விரும்பும் மாலைப் பொழுதாகும். மாலை நேரம் கடலின் கரையில் அமர்ந்து அங்கு வீசும் காற்றோடு கடலில் நிகழும் காட்சிகளைக் கண்டு ரசித்துக் கொண்டும் சின்னஞ் சிறுவர்கள் பூங்காக்களில் விளையாடிக் கொண்டிருப்பதையும் பார்க்கும்போது மனசு நிம்மதியடைகிறது.

மாலைப் பொழுதில் சூரிய வெப்பம் களைந்த அழகிய தோற்றம் வானில் தெரியும். அந்த வானை முட்டுவது போல் தூரத்தே தெரியும் மலைகள் மேலும் மலைக் காடுகளில் உள்ள பறவையினங்கள் இரை தேடல் முடிந்து தத்தமது கூடுகளை சத்தமின்றி சென்றடைகின்ற ஒவ்வொரு காட்சியும் உள்ளத்திற்கு உவகையூட்டுகின்றன.

வயல் வெளிகள் எங்கும் பச்சை பசேலென காட்சி தந்திட குளத்து நீரோடைகளும் அமைதி கொண்டிட இந்த மாலைப்பொழுதின் நிகழ்வுகள் எல்லாம் எம் நெஞ்சினில் என்றும் நீங்காது இடம்பிடித்திருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எனது பாடசாலை

எனது பாடசாலையின் பெயர் தி – கிண்ணியா அல்-அக்ஸா மகா வித்தியாலயம். இது கிண்ணியாவின் பிரதான வீதியில் திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ளது.

நான் படிக்கின்ற காலப்பகுதியில் அதிபர்களாக எம்.எம். முஸ்தபா, ஏ.ஆர்,எம். பரீத் போன்றோர்கள் இருந்தார்கள். இவர்களின் வழிகாட்டல்களினால் மாணவர்கள் பல்கலைக்கழக வாய்ப்பினைப் பெற்றுச் சென்றார்கள். மற்றும் சில மாணவர்களுக்கு வெளிநாடு செல்ல புலமைப் பரிசில்களும் கிடைத்தன. அத்தோடு மாணவர்கள் கலை, விளையாட்டு என தேசிய மட்டத்தில் சாதனை புரிந்தார்கள். இவ் அதிபர்களால் மாலை நேர வகுப்புக்களும் நடைபெற ஒழுங்குபடுத்தினார்கள். இதனால் மாணவர்கள் மேலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பு சித்தி பெற வழி ஏற்பட்டன. இவ்வாறான நல்ல வழிகாட்டல்களால் இவ் அதிபர்கள் மக்கள் மனங்களில் என்றும் நினைவு கூறத்தக்கவர்களாக இருக்கிறார்கள்.

தற்போது இப்பாடசாலை தி- அல் அக்ஸா கல்லூரி என உயர்வு பெற்றுள்ளது. தற்போதைய அதிபராக ஏ. ஆர். உபைத்துல்லா உள்ளார். கலை, வர்த்தகம், விஞ்ஞானம் என்று உயர்தர வகுப்புகள் உள்ளன. இப்பாடசாலை சிறந்த வளர்ச்சி கண்டு வருகிறது. இப்பாடசாலையை என்னால் என்றும் மறக்க முடியாதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புள்ள என் அம்மா



என் அம்மாவின் பெயர் எம்.எஸ். பாத்திமா அவர் என்னை பெற்றது முதல் அன்பு காட்டி வளர்த்து வருகிறார். என் அம்மா நான் விரும்பிய பொருட்களை வாங்கித் தந்து பாடசாலை விடுமுறை தினங்களில் என்னை மனங்கவரும் இடங்களுக்கு அழைத்துச் செல்வார்.

எனது படிப்பு ஒழுங்காக அமைய மாலை நேர வகுப்புக்களுக்கு செல்ல அனுமதி தருவார். சின்னச் சின்ன நல்ல கதைகளையும், பெரியோர்களின் வாழ்வு பற்றியும் எனக்குச் சொல்லித்தருவார். சிறுவர்களையும் பெரியவர் களையும் மதித்து நடக்கணும் என்று எனக்கு அறிவுரை சொல்வார்.

என் உடல் சுகவீனமுற்றால் என் அம்மா மிகவும் கவலைப்படுவார். என்னை உடனுக்குடன் வைத்தியரிடம் அழைத்துச் சென்று மருந்து எடுத்துத் தருவார். மேலும் என் அம்மா என் உடல் பூரண சுகமடைய எனக்காக இறைவனிடம் வேண்டுதல் செய்வார். எல்லா நல்ல விடயங்களிலும் எனக்கு துணை புரியும் என் அம்மாவை என்றும் நேசிக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒரு மழை நாளில்

நான் பாடசாலை விட்டு வீட்டுக்கு நடந்து வந்து கொண்டிருந்தேன். அப்போது மேகம் மெல்ல கறுத்திருந்தது திடீரென பெருங்காற்று வீசியது காற்றின் வேகத்தால் மண் பறந்தது. மின் வெட்டி இடையிடையே இடியும் இடித்தது. சிறு மழைத் துளிகள் என் மீது விழுவதைக் கண்டேன் இந்த துளிகள் பெருமழையைப் பொழிந்தது.

மழை விடும் வரை வீதி ஓரத்தின் ஒரு பகுதியில் நின்றேன். மழை விடுவதாக தெரியவில்லை. நேரமும் போய்க் கொண்டிருந்தது மழை அதிகம் பெய்ததால் வீதியோரக் கடைகள் மூடப்பட்டன தனியாக நின்றிருந்த எனக்கு பயமாக இருந்தது. பாடசாலை விட்டுப் போய்த்தான் சாப்பிடுவதால் நேரம் செல்லச் செல்ல பசியும் வந்தது. இரவு நேரமாகியும் மின்னலால் வீதி விளக்குகள் ஒளியிழந்தன. ஒரே இருள் மயம் என்ன செய்வதென்று தெரியாமல் எனக்குள் பயம் ஏற்பட்டது. அதோ தூரத்தில் வருவது யாரோ ? ஓ ! என்.... என்......... அப்பா! என்மனம் குளிர்ந்தது. அப்பா கொண்டு வந்த குடைக்குள் இருவரும் வீட்டை சென்றடைந்தோம். மழையும் ஓரளவு விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆங்கிலக் கல்வியின் அவசியம்

இலங்கை அபிவிருத்தி அடைந்து வரும் ஒரு நாடாகும். அதன் வளர்ச்சிக்கேற்ப தேவைகள் அதிகரித்துக் காணப்படுவதால் இன்னொரு நாட்டை நம்பியே அது இருக்கிறது. உதாரணமாக ஏற்றுமதி உணவு, இயந்திர சாதனங்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

எனவேதான் ஏனைய நாடுகளுடனான தொடர்புகள் எமக்கு அவசியமான ஒன்றாக இருக்கிறது. எமது நாட்டில் மொழியால் வேறுபட்ட பல்வேறு சமூகங்கள் வாழ்கின்றன. ஒவ்வொரு சமூகத்தைச் சேர்ந்தவர்களும் தத்தம் மொழி யையே பேசுகின்றனர். இந்த மொழி மற்றைய சமூகத்த வர்களுக்கு புரிந்துகொள்ள முடியாதுள்ளது. அதனால் பொதுவான ஒரு மொழியை அனைவரும் கற்றுக்கொள்ள வேண்டும். அதுவே ஆங்கில மொழியாகும். ஆங்கிலமானது சர்வதேச ரீதியிலும் இலங்கையிலும் அநேகமானோரின் பயன்பாட்டிலுள்ள மொழியாக இருக்கின்றது.

ஆங்கில மொழியே எமக்கு வெளிநாட்டு தொழில் வாய்ப்புக் களை பெற்றுக்கொள்ள உறுதுணையாகவும் அமையும். மேலும் இந்நாடுகளில் நடைபெறும் சம்பவங்களையும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திகள் மூலம் அறியவும் ஆங்கில மொழி மூலம் எழுதப்பட்ட நூல்களை படித்து அறிவை வளர்த்திடவும் ஆங்கில மொழி மிக அவசியம். அதனைக் கற்று வாழ்வில் அனைவரும் முன்னேறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நான் விரும்பும் தொழில்

ஒவ்வொரு மனிதரும் தனக்குப் பிடித்தமான ஒரு தொழிலை செய்து வருகின்றனர். அந்த வகையில் நான் விரும்புகின்ற ஒரு தொழில் ஆசிரியர் தொழிலாகும்.

நல்ல ஒரு ஆசிரியர் சமூகத்திற்கும் நாட்டிற்கும் நல்ல பிரஜைகளை உருவாக்குகின்றார். வைத்தியர் இன்ஜினியர், விமானமோட்டி என எந்த ஒரு தொழிலைச் செய்யவும் அவர்கள் உருவாகவும் முதன்மையானவராக இருப்பவர் ஆசிரியரே. அவரிடம் கற்றே மற்ற எந்தத் துறையை வேண்டுமானலும் தெரிவு செய்ய வேண்டிய அத்திவாரமாக ஆசிரியர் தொழில் உள்ளது.

ஒரு ஆசிரியர் தானும் கற்று கற்றவற்றை பிறருக்கும் கற்றுக் கொடுக்கும் போது அவரது அறிவை மேலும் விருத்தியாக்கிக் கொள்கின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பவனாக இரு, கற்பிப்பவனாக இரு, கற்பவனுக்கு உதவுபவனாக இரு, நான்காவதனாக இராதே. என்ற நபி மொழிக்கேற்ப ஆசிரியர் தொழில் புரிகின்றார்.

புத்தகக் கல்வியோடு சேர்த்து உலகக் கல்வியையும் மாணவர்களுக்கு ஆசிரியர் கற்பிக்கின்றார். மேலும் மாணவர்களின் மனோ நிலையை அறிந்து அன்னையாக, தந்தையாக, நண்பனாக, சக மாணவனாக என்று அவர்களுக் கேற்ப தன்னை மாற்றிக் கொண்டு கற்பிக்கின்றார்.

ஒரு ஆசிரியரின் முதல் ஆயுதம் அன்பாகும். அந்த அன்பின் மூலம் மாணவர்களின் வாழ்கைக்கு ஒளி ஏற்றுகின்றார்.

ஒரு எழுத்துக் கற்றுத் தந்தாலும் அவர் உனக்கு ஆசான் தான் என்று ஓர் அறிஞர் கூறியுள்ளார். அசிரியர் என்பவர் அனைவராலும் விரும்பத் தக்கவர். ஆசிரியரின் சேவையை கண்ணியப்படுத்தும் முகமாக உலக ஆசிரியர் தினம் ஒக்டோபர் ஆறாம் திகதி அனுஷ்டிக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மரங்கள் எங்கள் உறவுகளாகும்.


உலகில் ஒரு சிலர் தான் மிருகங்களோடு நட்பு வைத்திருக்கிறார்கள். ஆனால் பேச முடியாத மரங்களோடு அனைவரும் நீண்ட உறவு வைத்திருக்கின்றார்கள்.

மரங்கள் தரும் பயன்கள் ஏராளம். மரங்கள் வீடு கட்டுவதற்கும், உணவுக்கும், மருத்துவத் தேவைக்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் பூக்களையும், பழங்களையும் மரங்கள் தருகின்றன. அத்தோடு மனிதர்கள் சுவாசிப்பதற்கான காற்றையும் நிழலையும் மரங்கள் தருகின்றன. மரங்கள் அழிந்து போனால் மனிதர்களால் உயிர் வாழ முடியாது.

மனிதர்கள் அமரும் கதிரை தொடக்கம் உறங்கும் கட்டில் வரை மரங்களாகவே இருக்கின்றன. இவ்வாறு மனிதர்கள் மரங்களுடனே வாழ்கிறார்கள். எனவே தான் மரங்கள் எங்கள் உறவுகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அழகின் கடலே

பூமியைச் சுற்றி நான்கு பக்கங்களும் கடலே உள்ளது. 71 வீதம் பூமியை கடல் சூழ்ந்துள்ளது. கடலால் மனிதர்களுக்கு பயன்கள் ஏராளம். கடலில் வாழும் சில உயிரினங்களை மனிதர்கள் உணவாகப் பயன்படுத்தி வருகிறார்கள். இதனால் கடலுக்கும் மனிதனுக்கும் நெருக்கம் அதிகமாகவே காணப்படுகிறது. அதேவேளை, அதிகமான மக்கள் கடற்றொழிலை நம்பியே வாழ்கிறார்கள்.

கடலின் அழகை காலை, மாலை நேர வேளைகளில் நன்றாக ரசித்துப் பார்க்கலாம். காலைச் சூரியனின் ஒளிக் கதிர்கள் மெல்லிய அலைகளுக்குள்ளே பட்டு தெறிப்படைந்து பல நிறங்களை காட்டி நிற்கும். காலையில் வீசும் இளங்காற்று எம்மவர்கள் மேனியைத் தொட்டு தழுவிச் செல்லும். காலை நேரத்தில் கடல், கொந்தளிப்பு இல்லாமல் அமைதியாக காட்சி தரும். இரவு நேரம் கடலுக்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றால் கடலின் கரையைநோக்கி வீசும் குளிர் காற்றை நன்கு அனுபவிக்கலாம்.

மாலைப் பொழுதில் கடற்காட்சி இன்னும் அழகாக இருக்கும். வயது முதிந்தோர், இளையோர் என்று அனைத்துத்தரப்பினரும் கடற்கரையின் வெண்மணலில் நிகழும் காட்சிகளை ரசித்துக் கொண்டு தங்களது களைப்பினைப் போக்குவர். மேலும் சின்னஞ் சிறுவர்கள் தரையில் காணப்படும் வர்ணச் சிப்பிகளை பொறுக்கி விளையாடுவர். மறுபுறம் மண் வீடுகள் கட்டியும் விளையாடுவர். இவ்வாறு கடலின் உள்ளேயும் வெளியேயும் உள்ள ஒவ்வொரு காட்சியும் மனதை விட்டு மறையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நான் கண்ட கனவு.

எனக்கு விழுந்த அதிஷ்ட லாபச் சீட்டின் காரணமாக நான் உங்கள் மத்தியில் இன்று ஒரு பணக்காரனாக உள்ளேன். என்னுடைய இந்த நிலைமையால் தான் என்னை இந்த விழாவுக்கு பிரதம விருதினராக அழைத்துள்ளீர்கள் என்னைப் பொருத்த வரையில் ஏழை என்ற இனமே இல்லாதிருக்க வேண்டும். அதுவே எனது ஆசையாகும்.

மேலும் எல்லாரும் சந்தோஷமாக வாழ வேண்டும். இல்லாதவர்களைப் பார்த்து இருப்பவர்கள் கொடுத்துதவ வேண்டும். இதனால் மனித நேயம் உருவாகும். என்று, என் பேச்சு பலரின்கை தட்டுக்களின் மத்தியில் நீண்டு செல்ல.......

அம்மா, அப்பா ஏதாவது தாங்க !

அம்மா, அப்பா ஏதாவது தாங்க !

என்ற சத்தம் கேட்டு விழித்தெழுந்தேன். வீட்டின் முன்னால் ஒரு 'பிச்சைக் காரன். இவ்வளவு நேரமும் 'நான் கண்டது கனவு' என்று அப்போது தான் எனக்குத் தெரிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காலைப் பொழுது

இன்பங்கள் நிறைந் திருக்கும் பொழுது காலைப் பொழுதாகும். பூமியில் மனித இனங்கள் தொடக்கம் பறவையினங்கள் வரை ஆழ்ந்த நித்திரையில் இருக்கும் போது அவர்களை எழுப்பிடவே காலைச் சூரியன் உதயம் தருவான். அவனது சூரிய கதிர்கள்பட்ட இடங்கள் எல்லாம் இருள் அகன்று ஓடி பிரகாசம் தரும் அதனை கண்ணுற்ற ஒவ்வொரு மனிதனும் தங்களுடைய வேலைகளைச் செய்ய ஆயத்தம் செய்து கொள்வார்கள்.

உழவர்கள் வயலை நோக்கிச் செல்வார்கள் மீனவர்கள் கடலை நோக்கிச் செல்வார்கள். வீட்டில் உள்ள அன்னை மார்கள் அதிகாலையிலே பிள்ளைகளை துயில் எழுப்பி பாடசாலைக்கு அனுப்ப தயார்படுத்துவார்கள் பண்ணைத் தொழிலாளர்கள் பண்ணையை நோக்கி விரைந்து செல்வார் கள் இவ்வாறு ஒவ்வொரு காரியமும் அதிகாலையிலே சுறு சுறுப்புடன் நடந்து கொண்டிருக்கும் நேரம் செல்லச் செல்ல காலைப் பொழுதின் அழகுக் காட்சிகள் எம் கண்ணை விட்டும் தூரமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறிமுகம்

கட்டையாறு வீதி சின்னக்கிண்ணியா - 02 என்ற முகவரியைச் சேர்ந்த ஏ.எம். கஸ்புள்ளா படிக்கின்ற காலத்திலே பல்துறை இலக்கிய ஆர்வமுள்ளவர் அவரது முதல் படைப்பான தினகரன் சிறுவர் உலகப் பகுதியில் பூனைக்குட்டி என்ற கவிதை மூலம் இலக்கிய உலகிற்கு அறிமுகமானார்.

அதனைத் தொடர்ந்து கவி கஸ்புள்ளா ஏ.எம் கஸ்புள்ளா என்ற பெயர்களிலும் கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், தேசிய பத்திரிகைகளுக்கு எழுதி வருகிறார்.

கவிதை போட்டியில் பாடசாலைக் காலங்களில் 1993 ஆம் ஆண்டு தமிழ் தினப் போட்டியில் வடகிழக்கில் முதல் மாணவனாகவும் தேசிய மட்டத்தில் மூன்றாவதாகவும் விருது பெற்றார் மேலும் தேசிய இளைஞர் சேவை மன்றம் மற்றும் கிண்ணியா பிரதேச செயலகம் நடாத்திய கவிதை எழுதுதல் போட்டியிலும் பரிசுகள் வென்றார்.

நவமணி பத்திரிகை நடாத்திய கவிதை பரீட்சை நிகழ்விலும் சிறப்பு பாராட்டை பெற்றார் சமூக சேவைகளிலும் ஈடுபட்டுவரும் இவர் சின்னக்கிண்ணியா அப்துல் மனாப், பாத்திமா தம்பதிகிளின் கனிஷ்ட புதல்வராகும்.

"கற்க கசடற" இக்கட்டுரை தொகுப்பின் மூலம் இலக்கிய உலகில் இவரது நாமமும் நிலைத்து நிற்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை

ஏ.ஸீ.எம் முஸ்இல்
பணிப்பாளர் திட்டமிடல்
மாவட்டச் செயலகம்
திருகோணமலை

ISBN 978-955-4840-01-0

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org